மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Shamanism in Tribal Societies

Dr. N. Vennila

Associate Professor, Department of Tamil, Krishnasamy College of Science, Arts & Management for Women, Cuddalore, India

Manuscript ID : **MT111A0048**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 30.09.2022
Revised: 06.10.2022
Accepted: 19.10.2022
Published: 26.10.2022

Pages : 1-12

DOI: 10.5281/zenodo.7372189

CC BY NC SA

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

ABSTRACT:

Anthropologits say that such phenomena still observed tribal societies today. It is called 'shaman' by Durshikizian (a syllabic word. It refers to someone who dance or dance with emotion anthropologists. shamanisam is not a religion; it is an archaic ritual practice. The rites of passage are taken to the god muruga. In ancient litreture. Muruga underwent a body transformation for the cause of disease). A case in point act banding.

KEYWORDS:

Veriyattu, Velan, Akavanmakal, Samaanisan, Thinaikkudi Enkuzhu Murugan

இனக்குழுச் சமூகங்களில் ‘சாமனிசம்’

முனைவர். ந. வெண்ணிலா,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி, கடலூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

வெறியாடல் போன்ற நிகழ்வுகள் இனக்குழுச் சமூகங்களில் இன்றும் காணப்படுவதாக மானிடவியலாளர்கள் கூறுகின்றனர். இதனை ‘சாமன்’ என்பது துங்கிஸியன் (Durshikizian) மொழிச் சொல்லாகும். அது உணர்ச்சிவயமுற்று ஆடுகின்ற அல்லது மேலோக்கி எழுகின்ற ஒருவனைக் குறிக்கின்றது. மானிடவியலாளர்கள் ‘சாமனிசம்’ என்பது ஒரு சமயம் இல்லை; ஒரு தொன்மையான வழிபாட்டு நடத்தை என்கின்றனர். வெறியாடல் முருகக்கடவுளுக்கு எடுக்கப்படும் விழாவாகும். பண்டை இலக்கியங்களில் தலைவியின் காதற் நோய்க்காரணத்தின் பொருட்டு உடல்மாற்றம் கண்டஞ்சிய தாய் முருகனுக்கு படையல் நிகழ்த்துதல் என்னும் நிகழ்வு மரபாக உள்ளது.

கருச்சொற்கள்

வெறியாட்டு, வேலன், அகவன்மகள், சாமனிசம், திணைக்குடி இனக்குழு முருகன்

முன்னுரை

வெறியாடல் போன்ற நிகழ்வுகள் இனக்குழுச் சமூகங்களில் இன்றும் காணப்படுவதாக மானிடவியலாளர்கள் கூறுகின்றனர். இதனை ‘சாமன்’ என்பது துங்கிஸியன் (Durshikizian) மொழிச் சொல்லாகும். அது உணர்ச்சிவயமுற்று ஆடுகின்ற அல்லது மேலோக்கி எழுகின்ற ஒருவனைக் குறிக்கின்றது. மானிடவியலாளர்கள் ‘சாமனிசம்’ என்பது ஒரு சமயம் இல்லை; ஒரு தொன்மையான வழிபாட்டு நடத்தை என்கின்றனர். வெறியாடல் முருகக்கடவுளுக்கு எடுக்கப்படும் விழாவாகும். பண்டை இலக்கியங்களில் தலைவியின் காதற் நோய்க்காரணத்தின் பொருட்டு உடல்மாற்றம் கண்டஞ்சிய தாய் முருகனுக்கு படையல் நிகழ்த்துதல் என்னும் நிகழ்வு மரபாக உள்ளது.

1. முருகன் காதல் நோய் தருபவன், காதலரைச் சேர்ப்பவன், காதல்நோய் தீர்ப்பவன், காதல் கடவுள்.

2. முருகன் சீற்றம் வலிமையுடையவன், போர்க்குணம் மிக்கவன், போர்க்கடவுள் என்று சிலம்பு நா. செல்வராசு கூறுகிறார் (1993).

முருகனின் பண்பானது அகப்புற இருமரபுகளையும் அடியொற்றியுள்ளது.

தமிழர் அக வாழ்விற்கும் புற வாழ்விற்கும் கடவுள் முருகனா எனும் வினா ஈண்டு எழுகிறது. முருகனது இத்தகு குணங்கள் தமிழர் சமூகம் வரையில் படிப்படியாக உருப்பெற்றிருக்க வேண்டும்.

வெறியாடல் குறித்து தொல்காப்பியம்

சங்க இலக்கியங்களில் காணப்படும் பண்டைத் திணைக்குடிகளின் முருக வழிபாட்டில் பெரும்பான்மையாக வெறியாடல் நிகழ்வே காணப்படுகிறது. வெறியாடல் பற்றி தொல்காப்பியம்,

களவு அலராயினும் காமன் மெய்ப்படுப்பினும்
அளவுமிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்
கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும் **(தொல்.பொரு..113)**

என்கிறது. தலைவி காதல் நோயால் உடல் மெலிந்து முகப்பொலிவிழந்து போனாலும் தலைவியின் காதல் பலரால் அறியப்பட்டு அலர் தோன்றினாலும் முருகன் பொருட்டு வந்தது என்று நினைத்து கட்டுவிச்சி மூலமும், வேலன் மூலமும் குறியறிந்து வெறியாட்டை மேற்கொண்டனர் என்று நற்றிணை கூறுகின்றது. சான்று

தோடமை செறிப்பின் இலங்குவளை நெகிழக்
கோடேந்து அல்குல் அவ்வரி வாட
நன்னுதல் சாய படர்மலி அருநோய்
காதலன் தந்தமை அறியா துணர்ந்த
அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்
கிளவியின் தணியின் நன்றுமன் **(நற். 282)**

என்று பண்டைத்திணைக்குடிகளிடையே முருகனின் வெறியாட்டின் அவசியத்தை நிலைநிறுத்துகிறது. காதல் வயப்பட்ட தலைவியின் கைவளை கழலுமாறு உடல்மெலிந்து நோய்வாய்ப்பட்டதையும் அல்குலின் அழகிய வரிகள் வாடியதையும் நுதலின் சாயல் மாறியதையும் கண்டு இந்த நோய் முருகனால் வந்தது எனத் தவறாக உணராமல் வெறியாட்டிற்கு ஏற்பாடு செய்ததும், இந்தநோய் காதலனால் உண்டாகியது என்பதும் அது காதல் வயப்பட்டதால் உண்டான நோய் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெறியென உணர்ந்த அரிய அன்னையைக்
கண்ணினுங் கனவினுங் காட்டி இந்நோய்
என்னினும் வாராது மணியின் தோன்றும்
அம்மலைக் கிழவோன் செய்தனினிது எனின்...
நெடுவேட்கு ஏதும் உடைத்தோ (நற். 273)

என்னும் நற்றிணைப் பாடலானது இந்தக் காம நோய் என்னால் வாராது. தலைவனால் தான் வந்தது என்று முருகன் அன்னையிடம் கூறாதோ எனத் தலைவியின் எண்ணவோட்டத்தை வெளிப்படுத்துகிறது. இதன்வழி நோக்கும் போது தலைவனால் வரத்தக்க காமநோய் முருகனாலும் வரத்தக்கது என்பதும், தலைவனால் உண்டான காமநோயை முருகன் தந்தது எனப்பிறழ உணரும் போக்கும் அக்கால மக்களிடையே பெரிதும் காணப்பட்டது என்பதை உணரமுடிகிறது.

எனவே, களவு அலராக மாறல், காமம் மெய்ப்பத் தோன்றுவதும், உடல் மெலிவதும், பசலை படர்தலும் ஆகிய காமநோய் தலைவிக்குக் களவு காலத்தில் தலைவனாலும் சில வேலைகளில் முருகனாலும் ஏற்படுவதுண்டு என்பதை கூறுகின்றது. முருகனால் ஏற்படும் இந்த நோயைப் போக்குவதற்காக வெறியாடல் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதை உணரமுடிகிறது.

வெறியாடல் நிகழும் முறை

வெறியாடல் எவ்வாறு நடைபெறும் என்பதற்கு சங்கப்பாடல்களின் வழி அறியமுடிகின்றன. சங்க இலக்கியங்களில் வெறியாடல், வழிபாட்டு வழிமுறைகளை தெளிவுப்படுத்துகிறது அகநானூறு. வெறியாடும் பொருட்டு முருகனை வழிபடுவதற்காக வேலனை அழைத்து வேலன் வெறியாடும் களத்திணை நன்கு அமைத்து முருகனுடைய வேலிற்கு மாலை சூட்டி வளம் பொருந்திய வீட்டில் ஒலியுண்டாக முருகனைப் பாடிப் பரவிப் பலிகொடுத்து அழகிய சிவந்த தினையினைக் குருதியுடன் கலந்து தூவி முருகனை வரும்படி அழைத்து இல்லத்தில் வழிபாடு செய்தனர். வெறியாட்டு நடைபெறுவதற்கு முன் பெருமுதுபெண்டிர் நற்சொல் ஆலோசனையை மேற்கொண்டு அதன்படி இவ்வழிபாடு நடைபெற்றதாக அகநானூறு கூறுகின்றது. சான்று,

முது வாய்ப் பெண்டிர் அது வாய் கூற,
களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி,
வள நகர் சிலம்பம் பாடி, பலி கொடுத்து
உருவச் செந்திகை குருதியொடு தூஉய்,
முருகு ஆற்றுப்படுத்த, உரு கெழு நடுநாள் (அகம். 22)

என்பதாகும்.

முருகனை வழிபடும் வழிபாட்டு முறையாகிய வெறியாட்டுமுறை பெரும் வழக்கமாகவும், நம்பிக்கையாகவும் இருந்துள்ளது. இவ்வழிபாடு களம் அமைத்து நள்ளிரவில் நடைபெறும் சடங்குமுறையினைக் கொண்டதாகும். செந்தினை, அரிசி போன்ற நிவேதனப் பொருட்களைக் கொண்டு நடைபெற்றுள்ளது.

பாவையைப் போன்ற பலராலும் ஆராயத்தக்க அழகுடைய தலைவியின் உடலில் ஏற்பட்ட மாற்றம் முன்பு போல் நன்மையை அடையட்டும் என்று தெய்வத்தை தாய் வணங்குகிறாள். அப்போது அத்தெய்வ வழிபாட்டில் இனிய ஓசையை எழுப்பும் பல வகையான வாத்தியங்கள் ஒலிக்கின்றன. வெறியாடுவதற்காக அமைக்கப்பட்ட பரந்த களத்தில் அகன்ற பெரிய பந்தலில் வேலன் வெண்மையான பனந்தோட்டினைக் கடப்ப மலரோடு சூடி இனிய பாடலினை அழகாக அமைந்த தாளத்தோடு பொருந்தி முருகக் கடவுளின் பெரும் புகழினைத் துதித்து, வெறியாடும் பெரிய களமானது பெரும் புகழினைத் துதித்து, வெறியாடும் பெரிய களம் அழகுற வல்லோன் ஆட்டும் பொறியமைந்த பாவையைப் போலக் கைவீசி வெறியாடுவர் என்று பின்வரும் பாடலின் கருத்து அமைந்துள்ளது. சான்று

பாவை அன்ன பலர் ஆய் மாண் கவின்
பண்டையின் சிறக்க என் மகட்கு; எனப் பரைஇ,
கூடு கொள் இன் இயம் கறங்க களன் இழைத்து,
ஆடு அணி அயர்ந்த அகன் பெரும் பந்தர்,
வெண் போழ் கடம்பொடு சூடி இன்சீர்
ஐது அமை பாணி இரீ கைபெயர,
செல்வன் பெரும் பெயர் ஏத்தி, வேலன்
வெறி அயர் வியன்களம் பொற்பஇ வல்லோன்
பொறி அமை பாவையின் தூங்கல் வேண்டின் **(அகம். 98)**

என்று அகநானூறு கூறுகின்றது.

ஆட்டுக்குட்டியைப் பலி கொடுத்தல்

நெல் முதலிய நிவேதனப் பொருட்களைக் கொண்டு வெறியாட்டு நிகழ்த்தும் போது ஆட்டுக்குட்டியைப் பலிக் கொடுத்தனர். குறுணி வீதம் கொள்கலன்களில் பரப்பி வைக்கும் அரிசி, தினை முதலிய நிவேதனப் பொருட்களைப் பலியாகப் பரப்பி வைத்து உண்மையை அறியமாட்டாத வேலனை அழைத்து வெறியாடும் களத்தில் ஆட்டுக்குட்டியினைப் பலிகொடுத்து வழிபாடு செய்யப்படுகிறது. வெறியாட்டின் போது வெள்ளயாட்டின் குட்டியினது கழுத்தை அறுத்து தினை, அரிசி நிரம்பிய பிரம்பின்

கூடையை வைத்து வெறியாட்டுச் செல்லுகின்ற ஆற்றின் நடுவில் அமைந்த மணல் திட்டில் பல இசைக் கருவிகள் ஒலிக்கச் செய்து வழிபடுதல் மரபாகும்.

இவ்வழிபாட்டின் போது வழிபடுவோரின் மடமை வெளிப்படுமேயன்றி உண்மை வெளிப்படாது. வெறியாடும் வேலன் உண்மையை உணர்த்தவியலாது. தலைவியை பேய் தீண்டிற்று என்று கூறும்போது இச்செய்தியையும் நம்பும் நிலை சங்ககாலங்களில் இருந்துள்ளது. குறை நேரும் காலத்தில் முறை கேட்கும் நிலை இருந்ததாகவும் பின்வரும் சான்றுகளின் வாயிலாக அறியமுடிகிறது.

முறிபுரை எழில்நலத்து என்மகள் துயர்மருங்கு
அறிதல் வேண்டும் எனப் பல்பிரப்பு இரீஇ,
அரியா வேலற் தரீஇ, அன்னை
வெறிஅயர் வியன்களம் பொலிய ஏத்தி
மறிஉயிர் வழங்கா அளவை **(அகம். 242)**

மறிக்குரல் அறுத்து தினைப் பிரப்பு இரீஇ
செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்க
தோற்றம் அல்லது நோய்க்கு மருந்து ஆகா
வேற்றுப் பெருந்தெய்வம் பலஉடன் வாழ்த்தீ
பேஉய்க் கொளீஇயள் இவள் எனப்படுதல் **(குறுந். 263)**

தாய் முலை பெறா மறி கொலைப்படுத்தல் **(அகம். 292)**

வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவுள் ஆயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே **(நற். 34)**

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுந்து **(திரு.முருக.218)**

சில் பலி செய்து, பல் பிரப்பு இரீஇ **(திரு.முருக.234)**

என்பன சான்றுகளாக அமைகின்றன. வெறியாட்டின் போது குரவைக்கூத்து ஆடுவதும் வழக்கமாகும். மேலும், தெய்வம் தோன்றுவதற்குக் கோணம் முதலியன வரைந்து அரிசி, நெல் முதலியன பரப்பும் வழக்கமும் பண்டைத்தமிழர்களிடம் இருந்தது. இப்பரப்பிய நெல்லின்கண் வேலனது உருவம் தெரிந்தது என்றும் கூறப்படுகிறது. தினை, அரிசி முதலியவற்றைப் பல பகுதிகளாகக் கூடையிலோ அல்லது முறத்திலோ பலியாக இட்டு வைத்தனர் என வெறியாடலின் சிறப்பு கூறப்படுகிறது.

வேலனும் பூசாரியும்

வேலன் வெறியாட்டு எடுப்பவன் இவன் படிமத்தான் என்றும் கூறப்படுகிறான். முருகனைப் பூசை பண்ணும் தொழிலை உடையவன். தன்கையில் வேலைப் பெற்றிருத்தலின் வேலன் என்னும் பெயர் பெற்றான். இவன் உண்மையை அறியாமலே எதனையும் தெய்வத்தால் வந்தது என்று கூறும் இயல்பினன் என்பதால் 'அறியாவேலன்' என்று (அகம்:242) சுட்டப்படுகிறான். இதன்படி நோக்கும் போது சங்க இலக்கியங்களில் 'பூசாரி' என்ற ஓர் அங்கம் காணப்படுகிறது. வேலன் முருகக் கடவுளின் பூசாரி ஆவான். முருகனின் வேலைத் தாங்கி ஆடுபவன் என்பதால் வேலன் என்றழைக்கப்படுகிறான். முருகனை அழைத்து அவன் புகழைப் பாடும்போது, முருகன் அவன் மேல் வந்ததாகக் கருதப்படுகிறது. பிறகு முருகனின் அருட்பிரசாத மகாபலியாக முருகனுக்குப் படைக்கப்பட்ட பூக்களைத் தருகிறான். இது ஒரு சாந்தி வழிபாடு என்கின்றனர் மானிடவியலார்.

இனக்குழுக்கள் சிலவற்றில் பூசாரி என்பவர் மிகப்பெரும் பங்கு வகித்துள்ளார். 'பூசாரி' என்னும் சொல் பூசை செய்பவர் என்னும் விளக்கத்தைத் தருவதாகும்.

திராவிடர்கள் வழிபாட்டில் உயிர்ப்பலி கொடுத்தலோடு பூப்பலி செய்தலும் பெரும் வழக்காக இருக்கின்றது. வழிபடும் பொருளுக்கும் வழிபடுபவனுக்குமிடையில் ஓர் இடைத்தரகராக அல்லது இணைப்பாளராகப் பூசாரி விளங்குவதைக் காணமுடிகிறது என்கிறார் அ. பாண்டுரங்கன். (2011. 239)

முருகனுடைய பூசாரியான வேலன் நடத்தும் இம்மருநாடல் வெறியயர்தல், வெறியாடல், வெறியாட்டு எனச் சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது. 'வெறி' என்னும் சொல்லே மணம் என்னும் பொருள் தரும் பழந்தமிழச் சொல்லாகும். வெறியாடலை ஒத்த நிகழ்ச்சி இனக்குழுச் சமூகங்களில் இன்னும் காணப்படுவதாக மானிடவியலார்கள் கூறுகின்றனர்.

சங்க இலக்கியங்களில் வேலனாகிய ஆண் பூசாரியைப் போன்றே கட்டுவிச்சி என்னும் பெண் பூசாரியும் காணப்படுகிறாள். கட்டுவிச்சியைப் பெண் பூசாரி என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. கட்டுவிச்சி கழங்கு, நெல் முதலியவற்றை முறத்தில் வைத்து எண்ணிப் பார்த்துக் குறி கூறுபவள். ஆகையால் இவள் 'கட்டுவிச்சி' என்றழைக்கப்படுகிறாள். இப்பெண் குறிஞ்சி நிலப்பெண் ஆவாள். இவள் கட்டுப்பார்த்துக் குறிசொல்லும் போது தான் வழிபடும் தெய்வங்களை அழைத்துப் பாடுவதால் 'அகவன்மகள்' என்றழைக்கப்படுகிறாள். இப்பெண் முதுமைப் பருவத்தை உடையவள். இவளது தலைமுடி வெண்மையாக நரைத்திருக்கும். சங்கு மணிகளால் ஆன மாலையினை அணிந்திருப்பாள். கையில் சிறுகோல் வைத்திருப்பாள். தான் குறி

சொல்வதற்கு முன் தன் கையில் இருக்கக்கூடிய கோலை ஆட்டி தெய்வத்தை வழிபடுவாள். தான் வழிபடும் தெய்வத்தை அழைத்தும் அத்தெய்வம் இருக்குமிடமாகிய மலையையும் பாடும் இயல்புடையவள்.

மனிதன் தோன்றிய காலந்தொட்டு மனித மனத்தில் நம்பிக்கைகள் மிக ஆழமாக வேரூன்றிக் கூட்டு நனவிலியாக சமூகத்தை வழிநடத்தும் காரணியாக வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளன என்பதற்குச் சங்க இலக்கியம் கட்டியம் கூறுகிறது. நம்பிக்கைச் செயல்பாடுகளாக குறி சொல்லும் நடைமுறைகளாக விரிச்சி, கட்டு, கழங்கு, வெறியாட்டு, கன்னம் என்ற பெயர்களில் சமயம் சார்ந்த சடங்கு நிகழ்வுகள் மக்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையைச் சங்கப்பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ஓ. முத்தையா.2011.142;)

சங்ககாலத்தில் முருகனான வேலன் காடுகளிலும், சோலைகளிலும், ஆற்றிடைக் குகைகளிலும், ஆறு, குளம் ஆகியவற்றிலும் நான்கு பக்கங்களிலுள்ள மூலைகளிலும், மூன்று சந்திகளிலும் இருப்பான். வேலன் என்ற ஆண் மீதும் குறமகளான கட்டுவிச்சி என்ற பெண் மீதும் ஏறும் தெய்வ நம்பிக்கைகள் காலங்காலமாக நம்பப்பட்டு வந்துள்ளன. 'நம்பு' என்ற சொல்லிற்கு விரும்பு, விருப்பம், பற்று, ஆசை, நம்பிக்கைகொள், எதிர்பார் என்று அகராதியில் பொருள் கூறுகிறது. தொல்காப்பியத்தில் நம்பு என்ற சொல் விருப்பம் என்ற பொருளில் வழங்கப்படுகிறது.

மனிதனால் விரும்பி ஏற்றுக்கொள்ளக் கூடியது நம்பிக்கையாகும். மனிதனின் மன உருவாக்கத்தில் நம்பிக்கைகள் தோன்றுகின்றன.

மனித சமூகத்தின் நம்பிக்கை சார்ந்த செயல்பாடுகளில் குறி சொல்லுதல், குறி கேட்டல், குறி அறிதல், போன்றவையும் அவை சார்ந்த செயல்பாடுகளும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. குறி என்பதற்கு குறிப்பு, குறிப்பால், குறிப்பாய் உணர்த்துதல் என்றும், 'எதிர்கால நிகழ்ச்சியை அல்லது காணாத பொருளின் இருப்பை ஓர் அடையாளத்தின் அடிப்படையில் கூறும் அறிவிப்பு என்றும் களம் அமைத்து தெய்வ அருள் வரப்பெற்று ஆவேசமுற்று உரையாடி, நாடி வருவோருக்கு நல்வாக்குச் சொல்லி நம்பிக்கை ஊட்டும் சடங்குச் செயல்பாடு' என்றும் 'மீவியல் சக்திகளின் துணையால் மக்களின் நோய்களுக்கும் சிக்கல்களுக்கும் தீர்வு சொல்லி எதிர்கால நிகழ்வுகளையும் குறிப்பாகச் சொல்லுதல்' என்றும் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. மேற்கூற்றுகளின் வழி 'தெய்வ அருளால் சமூக தனிமனிதச் சிக்கல்களுக்கும் நோய்களுக்கும் எதிர்ப் பார்ப்புகளுக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் தீர்வு சொல்லி, மனித வாழ்க்கையின் தொடர் செயல்பாடுகளுக்கும் உந்து சக்தியாக விளங்கும் சமூகச் சடங்குச் செயல்பாடே குறி சொல்லுதல்' என விளங்கிக் கொள்ளலாம். (ஓ. முத்தையா.2011. 145)

சங்ககாலம் முதலே குறி சொல்லுதலும், குறி கேட்டலும் மக்களிடையே பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. தற்காலம் வரை இவ்வழக்கம் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. எனவே குறி சொல்லுதல் என்பது மரபு வழிபட்டதாக அமைகிறது.

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மனிதன் பறவைகளைக் கண்டு குறி அறிந்தனர். இக்குறிப்பறிதலை பறவையைக் குறிக்கும் சொல்லாகிய 'புள' என்னும் சொல்லால் குறித்தனர். பின் குறிகளை 'நிமித்தம்' என்ற பொதுப்பெயரால் வழங்கினர். குறி என்பதற்கு நிமித்தம் என்று அகராதி கூறுகின்றது. 'நிமித்தம்' என்பதற்கு சகுனம் என்று அகராதிப் பொருள் கூறப்படுகிறது.

மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சஞ்சார்தல் என்று
அன்னபிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கி **(தொல்.பொருள்.புறத்.36)**

என்றும்

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் **(தொல்.பொருள்.புறத்.47)**

என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது.

தொல்காப்பியம் குறிப்பிடும் மன்னு நிமித்தம், மொழிப்பொருள், தெய்வம் என்ற மூன்றும் முக்கியமானவை. மன்னு நிமித்தம் வழிவழி வந்த புள் நிமித்தம் ஆகும். மொழிப்பொருள், என்பது விரிச்சி என்னும் நற்சொல் தெய்வம் என்பது வேலன் கட்டு, கழங்கு, வெறியாட்டு என்னும் கடவுள் தன்மையுடையன என்று உரைக்கூறுவர் உரையாசிரியர்கள். சங்ககால மக்கள் நாள், புள், விலங்கு, மரம், நற்சொல், கட்டு, கழங்கு, வெறியாட்டு போன்றவற்றால் நிமித்தங்களைக் கணித்தனர். இவ்வகையான நிமித்தங்கள் அகப்புற வாழ்வியல் இரண்டிலும் காணப்பட்டன. புற வாழ்க்கையில் பெரும்பான்மையாக போர் நிமித்தம் பார்த்தல் பெரும் வழக்கமாக காணப்பட்டது. போருக்குச் செல்லும் மறவர்கள் உன்னமரத்தை நன்நிமித்தமாகக் கண்டுள்ளனர். இம்மரம் தளிர்த்து பசுமையாகச் செழித்திருந்தால் தொடுக்கும் போர் வெற்றியடையும் என்று நம்பினர்.

அக இலக்கியங்களில் தலைவன் தலைவியைப் பிரியும் காலத்து நீண்ட நாட்கள் பிரிந்து வாழும் தலைவியின் பொருட்டு நிமித்தங்கள் முக்கியத்துவம் பெருகின்றன. அவ்வாறு நிமித்தம் பார்க்கும் வழக்கமாக தலைவிக்கு குறமகள் குறி சொல்லல்

நடைபெறும். தலைவிக்குக் குறி சொல்லும் குறப்பெண் கைக்குறி, மெய்க்குறி, அறிகுறி ஆகிய முக்குறிகளையும் அறிந்து உரைக்கின்றாள்.

கூடலிழைத்தல்

பண்டைத்திணைக்குடிகளின் நிமித்தம் பார்த்தலில் கூடலிழைத்தல் என்னும் வழக்கம் காணப்பட்டது. தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நிமித்தம் அறிய தரையில் சுழிக்கும் சுழிக்குறி கூடலிழைத்தல் என்பதாகும். இது கண்களை மூடிக்கொண்டு வட்டம் போட்டுப் பார்ப்பது. ஓர் இடத்தில் வட்டமிடத் தொடங்கி அது முடியும்போது போடத்தொடங்கிய இடத்தோடு பொருந்தியிருந்தால் நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை. சுவரிலும் மணலிலும் மகளிர் இதனைச் செய்து பார்ப்பதுண்டு என்பதற்குச் சான்றாக அகநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

மறுதல் உள்ளமொடு குறுக தோற்றிய
செய்குறி ஆழ்வைகறோ றெண்ணி
எழுதுசுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண் (**அகம்**. 351)

என்பது சான்றாகும்.

குறி கூறுதலானது சொல்லும் முறையாலும் நம்பகத் தன்மையாலும் சமூக நடத்தைகளுக்கேற்பவும் பண்பாட்டுத் தாக்கத்திற்கேற்பவும் பல்வேறு வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அறிய முடிகிறது. முத்துக்குறி பார்த்தல் என்பதும் வளர்ச்சி பெற்று வந்துள்ளதை அறியமுடிகிறது. முத்துக்குறி பார்த்தல் என்பது சோழிகள் விழும் தன்மையின் அடிப்படையில் குறி சொல்வதாகும். குறி கூறுவோர் கையில் பன்னிரண்டு சோழிகளை வைத்து மூன்றுமுறை நன்றாகக் குலுக்கிப் போடுகின்றனர். இதில் ஒவ்வொருமுறையும் மேல்நோக்கி வரும் சோழிகளை மட்டும் பிரித்தெடுத்து எண்ணிக் கொள்கின்றனர். இவ்வாறு மூன்றுமுறை குலுக்கிப்போட்டு எண்ணியவற்றிலிருந்து பன்னிரண்டைக் கழித்து மீதமுள்ள எண்ணிற்குப் பலன் கூறுகின்றனர். (ஓ. முத்தையா.2011. 147-148)

அகவன் மகள்

அகவிப்பாடும் குரல்வளமும் குறிப்பறியும் திறனும் கொண்டு தொன்மைச் சமூகத்தின் உளவியல் மருத்துவராக இருந்துள்ளனர். அகவன் அகவிப்பாடும் ஆடவர் ஆண் என்றும் இசையோடு பாடும் பெண் அகவன் மகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். சங்க காலத்தில் வேலன், அகவுநர், அகலவன், கட்டுவிச்சி அகவிக் கட்டுரைத்த அகவன் மகளிர், முதுவாய்ப்பாணன் ஆகியோர் ஊர்முது வேலனாக ஊர் முதுபெண்டிராக இருந்தும் நாடோடிகளாகத் திரிந்தும் கட்டு கழங்கு

வெறியாட்டுச் சடங்குகளின் வழி குறிசொல்லியும் சடங்கியல் நிகழ்த்துனர்களாக இருந்து நற்சொல் கூறியும் வந்தனர் என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.

அகவன் மகளே அகவன் மகளே
பாடுக பாட்டே பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே (**குறுந்**.23)

மேற்கண்ட குறுந்தொகைப் பாடலில் தலைவியானவள் தலைவன் பால் கொண்ட காதல் காரணமாக உடல்மாற்றம் ஏற்பட்டதால் கட்டுவிச்சியை அழைத்து குறிகேட்டல் செய்தியைக் கூறுகிறது. குறிகூறும் கட்டுவிச்சியை தோழி அகவன் மகளே என்று விளிப்பதை உணரமுடிகிறது. அகவன் மகள் அகவிப்பாடும் பண்பினையும் காணமுடிகிறது. அகவன் மகள் வெண்மையான நீண்ட கூந்தலினைக் கொண்டு நரைமுது பெண்டிராகக் கழுத்தில் முத்துமாலை அணிந்து கையில் சிறுகோலினை உடையவளாகக் காணப்படுகிறாள்.

அறுவை தோயும் ஒரு பெருங்குடுமிச்
சிறுபை நாற்றிய பஃறலைக் கொடுங்கோல்
ஆகுவதறியும் முதுவாய் வேல (**அகம்**. 195)

என்று அகநானூறு கூறுகின்றது.

தமிழ்ச் சமூகத்தின் அறுபடாத படிமலர்ச்சியை மிகவும் நுட்பமான நோக்கினால் பாணர் மரபின் முன் தொடர்ச்சியானது தொல்குடிகளிடம் செல்வாக்கு செலுத்திய மூதறிவாளனிடமிருந்தே தொடங்குவதை அறியலாம். அவர்களே முன் அறியும் திறன், தீர்க்கமாக உரைத்தல், தெய்வமேறி நிற்கும் தன்மை, மந்திர ஆற்றல், குறிசொல்லுதல், நிமித்தம் கணித்தல் சமூகத்தை வழிநடத்துதல் போன்ற பண்புகளைக் கொண்ட முதுவாய் மனிதர்கள் தொல்பழங்குடிப் பாணமரபின் தோற்றத்தைக் காட்டுபவர்கள் ஆவார்கள். முதுவாய்வேலன், முதுவாய்ப் பெண்டிர், முதுவாய்ப்பல்லி போன்ற சொல்லாட்சிகள் இதனை மெய்ப்பிக்கும் கருத்துக்களாகும். பாண்மரபினரை முதுவாய்ப்பாணன், முதுவாய் இரவல் என்றழைக்கும் வழக்குகள் புறநானூற்றில் பயின்று வருகின்றன.

முடிவுரை

எனவே நம்பிக்கைகள் பொருட்டு முதுமை மக்கள் தெளிந்த அறிவோடு வழிநடத்தி வந்த வாழ்வியல் நிலை இங்குக் கூறப்படுகிறது. இதற்கு சடங்குகள் கருவியாக அமைந்துள்ளன. சடங்கியல் நிகழ்வை நிகழ்த்தும் கட்டுவிச்சி வேலன் அகலவன் என்போர் சங்ககாலத்தில் சமூகத்திற்கு முக்கிய பங்கினை வகுத்துள்ளனர்.

துணைநூற்பட்டியல்

1. சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). 1955. குறுந்தொகை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
2. ....1949. ஐங்குறுநூறு. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்,
3. சுப்பிரமணியன் .ச.வே.2010. சங்கஇலக்கியம். (மூலமும்தெளிவுரையும்) தொகுதி-2, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
4. செயபால். இரா. (உ.ஆ). 2004. அகநானூறு. சென்னை: நீயு செஞ்சுரி
5. சோமசுந்தரனார். (உ.ஆ). 1965. கலித்தொகை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
6. நச்சினார்க்கினியர். (உ.ஆ). 2007. கலித்தொகை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
7. நாகராசன் .வி. (உ.ஆ). 2007. குறுந்தொகை. சென்னை: நீயு செஞ்சுரி பதிப்பகம்.
8. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். (உ.ஆ). 1952. நற்றிணை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்,
9. விசுநாதன் .அ. கு.வெ. பாலசுப்பிரமணியன், அ. தட்ணாமூர்த்தி. (உ.ஆ). 2004. கலித்தொகை. சென்னை: நீயு செஞ்சுரி பதிப்பகம்.
10. வேங்கடசாமி நாட்டார். (உ.ஆ). 1946. அகநானூறு. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
11. ஆலிஸ். ஆ. (உரை).2004. பதிற்றுப்பத்து. (மூலமும் உரையும்). சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
12. இராகவையங்கார். இர. 1983. குறுந்தொகை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
13. இராமையா பிள்ளை. நா. 1999. நற்றிணை. சென்னை: வர்த்தமான் பதிப்பகம்.
14. சண்முகம்பிள்ளை .மு.1985. குறுந்தொகை. கரந்தை: தமிழ்ப்பல்கலைக் கழகம்
15. சாமிநாதையர் .உ.வே. 1949. ஐங்குறுநூறு. சென்னை: கபீர் அச்சுக்கூடம்.
16. சுப்பிரமணியன் .பெ., பாலசுப்பிரமணியன் .கு.வெ. தட்சணாமூர்த்தி. (உரை). 2004. பரிபாடல். சென்னை: நீயு செஞ்சுரி பதிப்பகம்.
17. துரைசாமிப்பிள்ளை. ஔவை. (மூலமும் உரையும்). 2004. ஐங்குறுநூறு. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்தியசைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
18. புலியூர்கேசிகன். (உ.ஆ).2008. சிலப்பதிகாரம்; சென்னை: பாரிநிலைம்
19. இளம்பூரனர். (உ.ஆ). 1974 தொல்காப்பியம். பொருளதிகாரம். சென்னை: கழகவெளியீடு
20. அறவாணன் .க.ப. 1984. மரவழிபாடு - திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
21. கைலாசபதி .க. 1966. பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும். சென்னை பாரி நிலையம்.
22. கோசம்பி .டி.டி. (மூ.ஆ). 1989. எஸ். ஆர். என். சத்யா (மொ.ஆ), பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
23. சண்முகம் பிள்ளை .மு. 1996. சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்குகளும். சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

24. .... (2002). தமிழர் மானிடவியல். திருச்சி. அடையாளம் பதிப்பகம்.
25. .... (2005). மானிடவியல் கோட்பாடு. சிதம்பரம்: மெய்யப்பண் ஆய்வகம்.
26. ...... (2015). பாணர் இனவரைவியல். திருச்சி. அடையாளம் பதிப்பகம்.
27. பண்பாட்டியல் நோக்கில்பண்டைத்தமிழர் சமயமரபுகள் புதுச்சேரி: புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

REFERENCES

1. U.V. Saminatha Iyar-Kurunthogai. Thenninthiya Saiva Sithantha Pathippu. Chennai
2. ....1949 Ingurunooru,
3. S.V. Suppiramaniyan
4. Sanga Ellakkiyam Moolamum Uraium
5. Manivasagar Pathippagam - Chennai
6. Jayapal.R Akananooru - NH CHENNAI
7. Somasuntharam - Kalithogai - Thenninthiya Saiva Sithantha Pathippu. Chennai
8. Nachinarkkiniyar - Kalithogai - Thenninthiya Saiva Sithantha Pathippu. Chennai
9. Nagarasan - Kurunthogai - NH - Chennai
10. Pinnathoor Narayanasamy - Natrinai - Thenninthiya Saiva Sithantha Pathippu. Chennai
11. Vengatasdasamy Nattaer - Agananooru Thenninthiya Saiva Sithantha Pathippu. Chennai
12. Ragavaiyangar Kurunthokai - Annamalai University Chidambaram
13. Ramaiya - Natrinai - Varthaman Pathippagam Chennai.
14. Sanmukanpillai - Kurunthokai - Karanthai Thmizh University.
15. K.P. Aravanan - Maravazhipadu- Dravita Appi Oppidu.Ulagathamizh Araichi Niruvanam.
16. Kailasapathi Pantaithamizhar Vazhum Vazhipadum.Chennai Pari Nilaiyam.
17. T.T. Kosampi - 1989. Pantai Thamizhar Varalaru - Ulagathamizh Araichi Niruvanam.
18. Sanmugam Pillai Sangathamizharin Vazhipadum Satangukalum - Ulagathamizh Araichi Niruvanam.
19. Pathavachalabharathi (2002). Thamizhar Manitaviyal - Ataiyalam Pathippagam. Thiruchi
20. .... (2005). Manitaviyal Kotpadu - Manivasagam Pathippagam. Chidambaram.
21. ...... (2015). Panar Enavaraiviyal Ataiyalam
22. Panpattiyal Nookkil Pantaithamizhar Samayamarapukal - Pilc - Pondycherry.
23. Pathavachalabharathi - Panpaattumanitaviyal - Manivasagam Pathippagam. Chidambaram.
24. Tholkappiyam - Porulathikaram Manivasagam Pathippagam. Chidambaram.
25. Thamizharmanaitaviyal - Panpaattumanitaviyal - Manivasagam Pathippagam. Chidambaram.
26. Sanga Elakkiyam Molamum Uraium - Meiyappan Noolagam.
27. Silappathikaram -- Manivasagam Pathippagam. Chidambaram